# இஸ்லாமியரும் இடஒதுக்கீடும்



தலைவர் கலைஞர்

# இஸ்லாமியரும் இடஒதுக்கீடும்

தலைவர் **கலைஞர்**

தலைமைக் கழக வெளியீடு:

**திராவிட முன்னேற்றக் கழகம்**

**அண்ணா அறிவாலயம்,**

**சென்னை - 600 018.**

ஜனவரி 2000

விலை: ரூ. 5

அச்சிட்டோர்: சில்வர் ஸ்ட்ரீக்,
174, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

## இந்நூல் ............

பகுத்தறிவு இயக்கமான திராவிட இயக்கத்தின் நூற்றாண்டுக் கால வரலாறே சர்வ சமய நல்லிணக்க நெடும் பயணம்தான்.

பெரியாரின் கொள்கைகளை அண்ணாவின் நளினத்தோடு சொல்லும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப் பாட்டை சொல்லாலும், செயலாலும் ஆற்றிவரும் தலைவர் கலைஞரவர்களின் இரண்டு சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூல்.

இலக்கியமும், அரசியலும் இணைந்த இந்நூலை பணிவுடன் படைக்கின்றோம்.

என். செல்வேந்திரன்,
கழக வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.

சென்னை - கலைவாணர் அரங்கில் 1999 டிசம்பர் 2ஆம் தேதியன்று நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆறாம் மாநாட்டின் நிறைவு விழாவில் நிறைவுப் பேருரை நிகழ்த்திய முதல்வர் கலைஞர்; ''இம்மாநாட்டில் இலக்கியம் தொடர்புடைய ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றி என்னுடைய கரங்களிலே ஒப்படைத்திருக்கிறீர்கள். நான் இவைகளை ஐந்து தீர்மானங்களாக கருதவில்லை. ஐந்து கட்டளைகளாக ஏற்றுக் கொள்கிறேன். உத்தரவு பெற்ற பிறகு அதை நிறைவேற்றுவதுதான் ஊழியனுடைய கடமை என்ற முறையில் அவைகளை நிறைவேற்றித் தருவேன்'' என்று குறிப்பிட்டார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஒன்பதாண்டுகளுக்கு முன்பு கீழக்கரையில் இந்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. அப்பொழுது ஒரு திருத்தம் சொன்னேன். ''இந்த மாநாட்டின் தலைப்பு ஐந்தாம் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு என்றிருக்கின்றது. இது ஒரே உலகம்தான். ஐந்தாவது உலகம் எங்கே இருக்கின்றது? ஆகவே இந்தத் தலைப்பைத் தயவு செய்து மாற்றி அடுத்தடுத்து நடைபெறுகின்ற மாநாடுகளிலாவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஐந்தாவது, ஆறாவது மாநாடு என்று பொறித்திடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக இந்த மாநாட்டிலே அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆறாம் மாநாடு என்று குறிப்பிட்டமைக்கு இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## என்னைப்பற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்தையும் திருத்திக் கொள்வீர்கள்

இதைப் போலவே என்னைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்தையும் திருத்திக் கொள்வீர்கள் (பலத்த கைதட்டல்) என்ற நம்பிக்கை எனக்கும் இருக்கின்றது.

அதற்காக நம்முடைய டாக்டர் அப்துல் கறீம் அவர்களும் தம்பி இடலம்புரிஜான் அவர்களும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதையும் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

இந்த மாநாடு இலக்கிய மாநாடு. அதனால்தான் இலக்கியத் தொடர்புடைய ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றி என்னுடைய கரங்களிலே ஒப்படைத்திருக்கிறீர்கள். நான் இவைகளை ஐந்து தீர்மானங்களாகக் கருதவில்லை. ஐந்து கட்டளைகளாக ஏற்றுக் கொண்டு (பலத்த கைதட்டல்) உத்தரவு பெற்ற பிறகு அதை நிறைவேற்றுவதுதான் ஊழியனுடைய கடமை(பலத்த கைதட்டல்) என்ற முறையில் நிறைவேற்றித் தருவேன் என்கின்ற வாக்குறுதியை இங்கே நான் அளிக்கின்றேன்.

ஒவ்வொரு தீர்மானமாக எடுத்து விளக்க வேண்டிய அவசியமில்லை. திரு. முகமதலி அவர்களே தீர்மானங்களைப் படிக்கும்போதே விளக்கியிருக்கிறார். எனவே அவைகளை நிறைவேற்றி விட்டதாகவே நீங்கள் கருதிக் கொள்ளலாம்.(கைதட்டல்)

முதலிலேயே தீர்மானங்களை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம்; தொடர்ந்து நான் பேசுவதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்(பலத்த கைதட்டல்). அப்படி ஒன்றும் விகல்பமாக, விரோதமாக, முரண்பாடாக நான் எதையும் பேசமாட்டேன் என்பது என்னோடு ஐம்பதாண்டு காலத்திற்கு மேலாகப் பழகிய ஆன்றோர்கள், சான்றோர்கள், இஸ்லாமியச் சமுதாயத்துப் பெரியோர்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

## இஸ்லாமியர்களும் தமிழர்கள்தான்

என்னுடைய அருமை நண்பர் நாகூர் அனீபா அவர்கள் 58 ஆண்டு காலமாக கலைஞர் அவர்களோடு எனக்குப் பழக்கம் என்று இங்கே கூறினார். இங்கே வீற்றிருக்கின்ற நம்முடைய கவிக்கோ அப்துல் ரகுமான்

அவர்களானாலும், தம்பி கவிஞர் மேத்தா அவர்களானாலும் இவர்கள் எல்லாம் என்னை நன்கு உணர்ந்தவர்கள். இலக்கியத் துறையில் எனக்குள்ள ஆர்வம், வேட்கை ஆகியவற்றை நன்கு புரிந்து கொண்டிருப்பவர்கள்.

இந்த மாநாட்டிலே கலந்து கொள்ள வேண்டுமென்று தம்பி வலம்புரிஜான் என்னிடத்திலே சொன்னவுடன் ஏற்றுக் கொண்டேன். காரணம் இலக்கிய ஆர்வம் - இஸ்லாமிய இலக்கிய ஆர்வம். இஸ்லாமிய இலக்கியம் என்று தனியாக ஒன்றில்லை - தமிழ் இலக்கியம்தான். இஸ்லாமியரும் தமிழர்கள்தான் என்கின்ற அந்த உணர்வோடு இதனை நான் நோக்குகின்றேன்.

தம்பி வலம்புரிஜான் எழுதியுள்ள இரண்டு புத்தகங்கள் இங்கே வெளியிடப்பட்டுள்ளன. அதிலே ஒரு புத்தகத்திலே அவர் குறிப்பிட்டிருக்கிறார். 111வது பக்கத்திலே குறிப்பிடும்போது -

''சிலர் பேச்சு வழக்கிலே இவர் முஸ்லீம். அவர் தமிழர் என்று அறியாமல் பேசிவிடுகிறார்கள். ஒரு தமிழ்ப் பெரியவரே தொலைக்காட்சியில் பேசுகிற போது ''தமிழர்களுக்குப் பொங்கல், கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துமஸ், முஸ்லீம்களுக்கு ரம்சான்'' என்று பேசினார்.

அப்படியென்றால் தமிழர் பண்டிகையான பொங்கல் தமிழர்களான முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எப்படி இல்லாமல் போனது?''

என்ற ஒரு கேள்வியை தம்பி வலம்புரிஜான் அந்த நூலிலே கேட்டிருக்கிறார். என்னை மிகவும் கவர்ந்த கேள்வி அந்தக் கேள்வியாகும். ஏனென்றால் அந்தக் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. இஸ்லாமியர்களும், கிறித்தவர்களும் தமிழகத்திலே தமிழர்கள்தான் என்ற பதில் இருப்பதால் நான் மெத்தவும் அந்தக் கேள்வியை விரும்பிப் படித்தேன்(பலத்த கைதட்டல்)

## மதங்களை மாற்றிக் கொள்பவர்கள் சாதிகளை மாற்றிக் கொள்ளாதது ஏன்?

இன்னொன்று; அவருடைய நூலிலே சாதியைப் பற்றிக் குறிப்பிடும்போது நான் பல இடங்களிலே அதைச் சொன்னாலுங்கூட, அவர் தன்னுடைய அழகு மொழியிலே குறிப்பிட்டிருப்பதை படித்துக் காட்டுவதில் ஒரு ஆர்வம்.

''ஒரு இந்து முஸ்லீம் ஆகலாம்; ஒரு முஸ்லீம் கிறிஸ்தவராகலாம். ஆனால் ஒரு செட்டியார் முதலியாராக முடியாது. ஒரு பிள்ளைவாள் பிராமணராக ஆக முடியவே முடியாது. மதங்களை மாற்றிக் கொள்ளுகிற மனிதர்களால் சாதிகளை ஏன் மாற்றிக் கொள்ள முடியவில்லை?''

என்ற ஒரு வினாவை எழுப்பி அவரே அதற்கு விடையளிக்கிறார்.

''சாதி இந்த உலகத்தில் பாதுகாப்புக் கவசமாகக் கருதப்படுகிறது! மதம் மறு உலகத்தின் அடைக்கல ஆலயமாக நினைக்கப்படுகிறது. மனிதனுக்கு இந்த உலகம் முக்கியம். எனவேதான் சாதியை மாற்ற முடியவில்லை. மதங்களை சுலபமாக மாற்றிக் கொள்கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## 100 சமத்துவபுரங்கள் விரைவில் முடிய உள்ளன

இதிலிருந்து சாதியினுடைய பிடிப்பு, சாதியினுடைய வேர் எந்த அளவிற்கு ஊடுருவி இருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும். அதனால் தான் இங்கே நம்முடைய பேராசிரியர் அப்துல் கறீம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சாதியைப் பெரும்பகுதி ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மதங்களை ஒன்றுபடுத்துவதற்காக மாத்திரமல்ல, அதைவிட மேலாக சாதிகளையெல்லாம் ஒன்றுபடுத்த வேண்டும். சகோதரத்துவத்தை, சமத்துவத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் சமத்துவபுரங்கள். அதுவும் தந்தை பெரியார் அவர்களுடைய நினைவாகத் தமிழகத்திலே ஐம்பதுக்கும்

மேற்பட்ட சமத்துவபுரங்கள் - திறக்கப்பட்டு விட்டன; விரைவில் நூறு சமத்துவபுரங்கள் முடிவடைய இருக்கின்றன என்ற நற்செய்தியையும் இந்த மாநாட்டிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது சமுதாயத் தொடர்புடைய செய்தி. ஆனால் இலக்கியத் தொடர்புடைய செய்தியாக ஒன்றிரண்டை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

பேராசிரியர் அப்துல் கறீம் அவர்கள் பேசும்போது ஏறத்தாழ 14 ஆண்டுகளுக்கு முன்பு அண்ணன் கவி கா.மு. ஷெரீப் அவர்கள் உரையெழுதிய சீறாப்புராணம் நூலை நான் சென்னை கோகலே மண்டபத்திலே வெளியிட்ட நிகழ்ச்சியை நினைபடுத்தி ஒரு சிலர் சொன்னார்கள்.

என்னுடைய அருமை நண்பர், மறைந்த அல்ஹாஜ் அப்துல் சமத் அவர்களுடைய தலைமையில் அந்தப் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது எனக்கு பசுமையாக நினைவில் உள்ளது. அந்த நிகழ்ச்சியிலே நான் எனக்கும் மறைந்த கவி அண்ணன் கா.மு. ஷெரீப் அவர்களுக்கும் இருந்த உறவை, நட்பை, அரசியல் தொடர்பை, மனவேறுபாடுகளை - அவைகளுக்கும் அப்பால் எங்களுக்கிடையே மலர்ந்திருந்த தோழமையை எடுத்து விளக்கியிருக்கிறேன். அந்தப் பொருத்தம்தான் இந்த மாநாட்டிலே பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக பல்வேறு தலைவர்களின் பெயரால் அரங்குகள் இங்கே அமைக்கப்பட்டிருந்தாலுங்கூட நான் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சி கவி கா.மு. ஷெரீப் அரங்கம் என்ற ஒரு பொருத்தத்தோடு அமைந்திருப்பது எனக்கு மேலும் பெருமகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு செய்தியாகும்.

## மந்திர - தந்திரங்களை ஏற்றுக்கொண்டதில்லை இஸ்லாம்

இஸ்லாமிய மார்க்கம் தந்திரங்கள், மந்திரங்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டதில்லை. அங்கே அது இருக்குமென்று எண்ணியவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள்.

குறிப்பாக நான் இன்றைய தினம் படித்த ஒரு இஸ்லாமிய நூலில் -

''அவ்லியாக்களின் தலைவர் ஜுனைதுல் பஃதாதியிடம் ஒருவர் பன்னிரண்டு வருடங்கள் மாணவனாகப் பணியாற்றினார். இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளிலும் அந்த மேதையிடம் எந்த ஓர் அற்புதக் காட்சியையும் காணாத அந்த மாணவர் சலிப்புற்று, நாம் தவறாக இவரைப் பெரும் மகான் என எண்ணி விட்டோம். இனியும் இவரிடம் இருந்து கொண்டு காலத்தை வீணாக்கக்கூடாது என நினைத்து ஜுனைது அவர்களிடம் சென்று "ஷேக் அவர்களே தங்களை ஒரு பெரும் ஞானி என்று நம்பிப் பன்னிரண்டு வருடங்கள் தங்களுக்கு மாணவனாக இருந்தேன். ஆனால் ஞானிகளில் பலரைப் போன்று தாங்கள் தண்ணீரில் நடக்கவோ, விண்ணில் பறக்கவோ, வேறு பல அற்புதங்கள் நிகழ்த்தவோ சக்தியவற்றவராக இருக்கிறீர்கள். எனவே ஞானம் முற்றுப் பெறாத தங்களிடம் இனியும் நான் நாள் கடத்த விரும்பவில்லை. சென்று வருகிறேன். அனுமதி கொடுங்கள்!'' என்று கூறினார்.

அதற்கு ஜுனைது (ரஹ்) அவர்கள், ''மாணவரே என்னுடன் நீங்கள் இருந்த பன்னிரண்டு ஆண்டு காலத்தில் என்றாவது ஒரு தொழுகையாகிலும் ஜமா அத்துத் தவறி நான் தொழுததை நீர் பார்த்ததுண்டா?'' என்று வினவினார். ''இல்லை. எப்பொழுதும் ஜமா அத்துடன்தான் தாங்கள் தொழுகிறீர்கள்'' என்று பதில் கூறினார் மாணவர்.

## <u>மார்க்கத்தில் ஒரு அணுவும் பிசகாமல் நடப்பதே அற்புதம்</u>

''ஜமா அத்து நடக்கும்போது என்றாவது முதல் - ஸஃப் - அணியில் நிற்காது இரண்டாவது மூன்றாவது அணியில் நின்று நான் தொழுதைப் பார்த்திருக்கின்றீரா? என்று ஜுனைது (ரஹ்) அவர்கள் மீண்டும் கேள்வி கேட்க, ''இல்லை. தாங்கள் எப்பொழுதும் முன் அணியில்தான் நின்று தொழுவதைப் பார்த்திருக்கிறேன்'' என்று பதிலளித்தார் மாணவர்.

மூன்றாவது கேள்வியைத் தொடுத்தார் ஜுனைது; ''என்றாவது நான் ஜமா அத்தில் தக்பீர் தஹ்ரீமா (தொழுகை ஆரம்பிக்கும்போது கூறும் முதல் தக்பீர்)வில் இமாமுடன் சேராது தாமதமாக வந்து சேர்ந்ததையாவது பார்த்திருக்கின்றீரா?''

''இல்லை. எப்பொழுதும் முதல் தக்பீரிலேயே தாங்கள் இமாமுடன் சேர்ந்து விடுகிறீர்கள்'' என்ற பதில் மாணவனிடம் இருந்து வந்தது.

இறுதியில் மாணவனை நோக்கி அவர் சொன்னார். ''பறவைகளும் விண்வெளியில் பறக்கின்றன. மீன் இனங்களும் நீரில் மிதக்கின்றன. அவை செய்யும் செயல் போன்று ஒரு மனிதன் செய்வது பெரும் அற்புதம் அல்ல. மார்க்கத்தில் ஒரு அணுவும் பிசகாமல் நடப்பதுதான் பெரும் அற்புதம்'' என்று அழுத்தமாகச் சொன்னார்(கைதட்டல்)

இந்த மார்க்கம் உலகத்தில் பலரையும் கவர்ந்திருப்பதற்கு இது ஒரு பெரும் முக்கியமான காரணம் என்பதை நான் உணர்ந்து மகிழ்கிறேன். பாராட்டுகிறேன். இதை எல்லா மக்களுக்கும் சொல்ல வேண்டுமென்ற ஆர்வத்தோடுதான் இந்த இனிய இலக்கிய விழாவிலே இதை எடுத்து கூறியிருக்கிறேன்.

## தமிழில் என்னென்ன இலக்கிய வடிவம் உண்டோ அந்த வடிவில் எல்லாம் இஸ்லாமிய எழுத்துக்கள்

பல இலக்கியங்கள் - ஏறத்தாழ இரண்டாயிரம் நூல்கள் இஸ்லாமியப் பெருமக்களால், அறிஞர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழிலே என்னென்ன இலக்கிய வடிவங்கள் உண்டோ அந்த வடிவங்களில் எல்லாம் இஸ்லாமியப் புலவர்களுடைய, இஸ்லாமிய அறிஞர்களுடைய, கவிஞர்களுடைய எழுத்துக்கள் இன்றைக்கு இடம் பெற்றிருக்கின்றன. அவைகளில் ஒரு பெரும் நூல்தான் உமறுப் புலவர் யாத்த சீறாப்புராணம்.

அந்த சீறாப்புராணத்தில் என்னென்ன கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாகும். ஏனென்றால் - மன்னிக்க வேண்டும் - இங்கே இருக்கின்ற பெருமக்களில்கூட பலர் சீறாப்புராணம் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்களேயல்லாமல் படித்திருப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்பவில்லை. படித்திருப்பவர்கள் கைதூக்குங்கள் பார்க்கலாம் என்றால் எத்தனை பேர் தூக்குவீர்கள், என்று எனக்கு நன்றாகத் தெரியும். இப்போதே தூக்குகிறீர்கள். எண்ணிக்கொண்டு தானிருக்கிறேன். அதுவும் இவ்வளவுதானா என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

## சீறாப்புராணத்திற்கு அண்ணன் கா.மு.ஷெரீப் எழுதிய உரை

அதிலே ஒரு பகுதியைப் படித்துக் காட்டுவது சிறப்பு என்பதால் படித்தே காட்டுகிறேன்.

''ஆமினா அம்மையாருடைய கணவர் அப்துல்லா இவர்கள் நபிகள் நாயகத்தினுடைய தந்தையார்! கர்ப்பமுற்றிருக்கிற தன்னுடைய மனைவியை விட்டு அப்துல்லா மதீனா சென்றிருக்கிற நேரத்தில் மதீனாவிலே நோய்வாய்ப்பட்டு மறைந்துவிடுகிறார் என்ற செய்தி வருகிறது.

செய்தி கேட்டு ஆமினா அம்மையார் அளவற்ற துயரமடைகிறார். அந்த இடத்தை உமறுபுலவர் வருணிக்கிறார்.

''வருந்தி நொந்தழுது ஆமினா விடைதலும் வளைந்து திருந்திழைக்கொடி மடவியர் இரங்குதல் திரன்முத்து இருந்தசூல்வலம்புரியினைச் சூழ்ந்த சங்கினங்கள் இரைந்து இரங்குவ போன்றன எங்கணும் நிறைந்தே''

ஆமினா அம்மையார் சோகத்தால் வாடிக் கிடப்பது எப்படி இருக்கிறதென்றால் அந்த அம்மையாரைச் சுற்றி அந்த ஊர்ப் பெண்கள் எல்லாம் சூழ்ந்திருப்பது

ஒரு வலம்புரி சங்கைச் சுற்றிப் பல வெண் சங்குகள் சூழ்ந்திருப்பதைப் போல இருக்கிறது .என்று உமறுப்புலவர் குறிப்பிடுகிறார்.

இதற்கு உரை எழுதிய அண்ணன் கவி. கா.மு.ஷெரீப் அவர்கள் ஆமினா அம்மையாரை வலம்புரிச் சங்காக எடுத்துக் காட்டிவிட்டு, சுற்றி அமர்ந்திருந்த பெண்கள் எல்லாம் வெண் சங்குகளாக இருந்தார்கள் என்பதையும் எடுத்துக் காட்டிவிட்டு, அதோடு நிறுத்தாமல் - இதற்கு உட்பொருள் ஒன்று இருக்கிறது; உமறுபுலவர் அந்த உட்பொருளைத் தன்னுடைய உள்ளத்திலே வைத்துதான் அதை எழுதியிருக்கிறார் என்று அழகுபட அதற்கு ஒரு கற்பனையான விளக்கமளிக்கிறார்.

வலம்புரிச் சங்கு ஊதாமலே - தானே ஒலித்துக் கொண்டிருக்கக்கூடிய இயல்பு வாய்ந்தது. அதை வாயிலே வைத்து ஊத வேண்டியதில்லை. வலம்புரிச் சங்கில் காற்றுப்படுகிற நேரத்தில் தானாக அதிலிருந்து ஒலி எழும். மற்ற சங்குகள் ஊதினால்தான் ஒலிக்கும். ஊதாவிட்டால் ஒலிக்காது.

ஆமினா அம்மையார் உண்மையிலேயே தனது கணவன் மறைந்து விட்ட காரணத்தால் யாரும் தூண்டாமலே அழுது கொண்டிருக்கிறார்கள் வலம்புரிச் சங்கு போல! மற்ற பெண்கள் எல்லாம் ஏதோ ஒப்புக்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் வெண் சங்குகளைப் போல.(கைதட்டல்) அதற்கும் கவி. கா.மு.ஷெரீப் ஒரு காரணம் சொல்கிறார்.

ஏன் ஒப்புக்கு உட்கார்ந்திருக்கிறார்கள் தெரியுமா?

ஆமினா அம்மையார் மதீனாவைச் சேர்ந்தவர். அப்துல்லாவிற்கு மக்காவிலே பெண் எடுக்காமல் மதீனாவிலே பெண் எடுத்த காரணத்தினால் மக்காவிலே உள்ள பெண்கள் எல்லாம் ஏற்கனவே கோபமாக இருக்கிறார்கள். எனவே அந்தப் பெண்ணுக்கு ஒரு துயரம் வந்துவிட்ட காலத்தில் அதைப்பற்றி கவலைப்படாமல்

அந்த பெண்கள் எல்லாம் அழாமல் ஊதப்படாத சங்குகளைப் போல - வெண்சங்குகளைப் போல சூழ்ந்து அமர்ந்திருக் கிறார்கள் என்று அண்ணன் ஷெரீப் அவர்கள் விளக்குகின்ற அந்த நேர்த்தியைக் கண்டபோது, நான் உள்ளபடியே நெகிழ்ந்து போனோன்.

## இஸ்லாம் மார்க்கத்தின் முதல் உறுப்பினர் கதீஜா அம்மையார்

இன்னொன்று;

நபிகள் நாயகம் மார்க்க போதனைகளைச் செய்து கொண்டிருந்த போது முதல் உறுப்பினராக இஸ்லாம் மார்க்கத்திலே முதலிலே தன்னை இணைத்துக் கொண்டவர் கதீஜா அம்மையார். அதற்கு அடுத்து அபுபக்கர். அதற்கு அடுத்த அலி; நான்காவாவதாக ஜைது என்பவர். அதற்கு உமறுப்புலவருடைய பாடல்

''அடிமையி லோங்கில அறிவின் மிக்கவர்.
வடிவுறும் ஆரிதா மதலையாகிய
மிடலவர் சைதெனும் வீரகேசரி
இடர் அறுங் கதி, இசுலாமி லாயினா''

இது உமறுப்புலவருடைய சீறாப்புராணப் பாடல். இதற்கு விரிவுரை அண்ணன் ஷெரீப் அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது.

ஹாரிதா என்பவர் ஏமான் பகுதியைச் சேர்ந்த ஒரு கிறித்தவர். அவர் அடிமை வியாபாரம் செய்கின்ற ஒருவரிடத்தில் தன்னுடைய மகன் ஜைதை ஒப்படைக்கிறார். அவர் அந்தச் சிறுவனை விலை கொடுத்து வாங்கி கதீஜா அம்மையாரிடத்திலே விற்று விடுகிறார். அம்மையாரிடத்திலே அந்த அடிமைச் சிறுவன் ஜைது பணியாற்றிக் கொண்டிருக்கிறான்.

## கொத்தடிமை ஒழிப்பை அன்றைக்கே நிறைவேற்றிக் காட்டிய நபிகள் நாயகம்

கதீஜா அம்மையார் நபிகள் நாயகத்தை மணந்து கொண்ட பிறகு, அவருக்கு ஏவல் செய்வதற்காக ஜைது என்ற இளைஞனை - அடிமையாக வாங்கப்பட்ட பையனை அனுப்பி வைக்கிறார்.

நபிகள் நாயகம் ''அடிமையாக அவனை ஏற்றுக் கொள்ள மாட்டேன்; என்னுடைய வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

ஆக, அந்தக் காலத்திலேயே அப்பொழுதே கொத்தடிமை ஒழிப்புத் திட்டத்தை நபிகள் நாயகம் (பலத்த கைதட்டல்) பின்பற்றியிருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை என்றே கருதுகிறேன்.

உமறுப்புலவர் எவ்வளவு அழகாக உவமையோடு கவிதைகளை எழுதினார், பாக்களை யாத்தார் என்பதற்கு கா.மு. ஷெரீப் அவர்களே எடுத்துக்காட்டிய ஒரு உதாரணம். நபிகளை காண்பவர்க்கு:-

'' கண்படைத்தவர் இவர் எழில் காண்பவர் முகத்திற்
புண்படைத்தவர் இவர் தமைக் காண்கிலார்''

கண் படைத்தவர்கள்தான் இவருடைய எழிலை காண்பவர்கள். முகத்திலே இரண்டு புண்களைப் படைத்தவர்கள் இவர்தமைக் காண்கிலார்.

இது உமறுப்புலவருக்கே உரிய உவமை என்று அண்ணன் ஷெரீப் வாதாடவில்லை. என்ன சொல்கிறார் என்றால் -

திருக்குறளினுடைய தாக்கம் என்று திருக்குறளுக்குத் தர வேண்டிய பெருமையையும் அண்ணன் ஷெரீப் அவர்கள் அதிலே குறிப்பிடுகிறார்.

''கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லாதவர்''

என்ற குறளை எடுத்துச் சொல்லி

''கண்படைத்தவர் இவரெழில் காண்பவர் முகத்தில்
புண்படைத்தவர் இவர் தமைக் காண்கிலார்''
என்கிறார்.

## அழகு என்பதற்கு உமறுப்புலவர் தந்த விளக்கம்

எழில் காண்பவர் என்றால் அழகைப் பார்த்து மயங்குபவர் அல்லர். அழகைப் பார்த்து இவர் பெரிய மனிதர் என்று கருதுபவரல்லர். எந்த அழகைப் பற்றி உமறுப்புலவர் குறிப்பிடுவதாக ஷெரீப் சொல்கிறார் என்றால் அன்பு, அருள், அறிவு, நாணயம், நம்பிக்கை இவைகள் எல்லாம்தான் அழகு என்று குறிப்பிடுகிறார். இன்று வேறு அழகிலே மயங்கி நாடே நாசமாகப் போய்க்கொண்டிருப்பதைப் பற்றி உங்களுக்குத் தெரியும் (பலத்த கைதட்டல்)

ஆனால் அழகு என்றால் என்ன என்பதைப் பற்றி அன்றைக்கு உமறுப்புலவர் விளக்கியிருப்பதை அண்ணன் ஷெரீப் அவர்கள் சீறாப்புராண உரைநடையிலே எழுதிக் காட்டியிருக்கிறார். இன்னொன்று மிக முக்கியமானது.

''மானுக்கு துணை நின்ற படலம்'' என்று சீறாப்புராணத்திலே ஒரு படலம். ஒரு மான் - ஒரு பெண்மான், ஆண்மான், ஒரு குட்டிமான். பால் அருந்தும் பருவத்திலே உள்ள குட்டி.

ஒரு வேடன் இந்த மான்களைத் துரத்துகிறான். சிதறியோடுகின்ற நேரத்தில் பெண் மான் மாத்திரம் வேடனிடத்திலே சிக்கிவிடுகிறது.

அது, ''அய்யா, என்னுடைய குட்டி மானுக்கு பால் தர வேண்டும். அதற்காகவாவது என்னைக் காப்பாற்று'' என்று கெஞ்சுகிறது. வேடன் விடுவதாக இல்லை. அப்பொழுது நாயகப் பெருமான் அந்த வழியாக வருகிறார். என்ன என்று கேட்கிறார். பெண்மான் தன்னுடைய கதையைச் சொல்கிறது. ''என்னுடைய குட்டி மானுக்கு நான் பால் தர வேண்டும். வேடன் வழி விட மறுக்கிறான்'' என்று சொல்கிறது.

மான் பேசுமா என்று கேட்டால், மான் பேசியது என்று சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள்வதாக இல்லை. மான் பேசுமா என்று கேட்டால் பால பாடத்திலே நரியும் காக்கையும் பேசியதாகப் படித்திருக்கிறோம். ஆகவே ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்வதற்காக இங்கே மான் பேசுவதாகக் கற்பனை சீறாப்புராணத்தில்.

## வாக்குறுதியை நிறுவேற்றுவதே இஸ்லாம் மார்க்கத்தின் தூய கொள்கை

உடனே நபிகள் வேடனைப் பார்த்துச் சொல்கிறார். ''அந்தப் பெண்மான் சென்று அதனுடைய குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு வரட்டும், அது வருகிற வரையிலே அதற்குப் பிணையாக நான் இருக்கிறேன்'' என்று நாயகப் பெருமான் சொல்கிறார். அதை வேடன் ஏற்றுக் கொள்கிறான். ஏற்றுக் கொண்டு பெண் மானை அனுப்பி வைக்கிறான். பெண் மான் சென்று ஆண் மானையும் கண்டு, குட்டி மானைக் கண்டு அதற்கு பாலும் கொடுத்து விட்டு - நான் திரும்பிச் செல்ல வேண்டும் என்கிறது.

''சொன்னாலென்ன, போய்த்தான் தீர வேண்டுமா'' என்கிறது ஆண் மான். '' இல்லை வாக்குறுதி வழங்கி விட்டேன், செல்லவேண்டும்'' என்கிறது பெண் மான். ''வாக்குறுதி வழங்கினால் என்ன, போகத் தேவையில்லை'' என்கிறது ஆண்மான். பெண்மான் ''இல்லையில்லை, என்னை நம்பி நாயகப் பெருமான் தன்னைப் பிணையாகக் கொடுத்திருக்கிறார். நான் நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டேன்'' என்று சொல்லி பெண்மான் புறப்படுகிறது.

அதை எல்லா மான்களும் தடுக்கின்றன வாக்குறுதியை நிறைவேற்றத் தேவையில்லை என்று.

வாக்குறுதியை நிறைவேற்றுவதுதான் இஸ்லாம் மார்க்கத்தின் தூய கொள்கை(பலத்த கைதட்டல்) என்பதை நிலை நாட்டுவதற்காக எழுதப்பட்ட கதை இது. அதற்கிடையே வேடன் அந்த மானின் நம்பிக்கையை, நாணயத்தைப் பார்த்து அவனே அந்த பெண்மானையும் ஆண்மானையும் குட்டிமானையும் விட்டு விட்டு நபிகள் நாயகத்தை வணங்கிச் சென்றான் என்று சீறாப்புராணத்திலே உமறுப்புலவர் குறிப்பிடுகிறார்.

## சென்னைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆய்வு

இப்படி பல செய்திகளை அடங்கிய பல இலக்கியங்கள், அறிவுரைகளை வாரி வாரி வழங்குகின்ற இலக்கியங்கள், காப்பியங்கள் இஸ்லாமியப் பெருமக்களால் படைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் நாட்டிலே பரப்பிட வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் இன்று காலையிலே திரு. முகமதலி அவர்கள் எழுதிய தினமணி கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். படித்தவுடனே முடிவு செய்து கொண்டேன் - இந்த தீர்மானத்தை இன்றைக்கு நிறைவேற்றியே தீருவது என்று.

அதிலே குறிப்பிட்டிருக்கிறார் - ஜைன மதத்திற்கு, கிறித்தவ மதத்திற்கு, புத்த மதத்திற்கு என்று எல்லா மதங்களுக்கும் அங்கே இலக்கிய ஆய்வுகள் இருக்கின்றன, இஸ்லாமிய இலக்கியத்திற்குத்தான் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். சாதிக் (முன்னாள் துணைவேந்தர்) இருந்தும் சாதிக்காததை நான் நிச்சயமாக சென்னைப் பல்கலைக் கழகத்திலே சாதித்துக் காட்டுவேன் (பலத்த கைதட்டல்) என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

## அமைச்சரவையில் முஸ்லிம்கள் இடம்பெற குரல் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 47 முதல் 62 ஆம் ஆண்டு வரையிலே தமிழகத்திலே முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் அமைச்சராக இல்லை என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. முஸ்லிம்களுக்கு அமைச்சரவையிலே இடம் தரவேண்டும் என்ற குரலை அன்றைக்கு எழுப்பியவர் எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா என்பதையும் வரலாறு மறைக்க முடியாது. அதற்குப் பிறகுதான் 1962இல் கடையநல்லூர் மஜீத் அவர்கள் காங்கிரஸ் அமைச்சரவையிலே ஒரு அமைச்சராக இடம் பெற்றார் - அண்ணா குரல் கொடுத்த பிறகு என்பதையும் நினைவிலே நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர் தமிழக மேலவையிலும் டெல்லி மேலவையிலும் முஸ்லிம்களை இடம் பெறச் செய்த பெருமையும் தமிழகத்தைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உண்டு.

காங்கிஸ் ஆட்சிக் காலத்தில் தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு 47 முதல் 62 வரையில் ஒரு முஸ்லிம் உறுப்பினர்கூட நியமிக்கப்படவில்லை. டெல்லி மாநிலங்களவைக்கும் முஸ்லிம்கள் தமிழகத்தின் சார்பில அனுப்பப்படவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம்தான் திருச்சி ஜானிபாய் அவர்களை தமிழக மேலவை உறுப்பினராக அன்றைக்கு ஆக்கியது. ஜனாப் அப்துல் சமத் அவர்களை மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கியதும் திராவிட முன்னேற்றக் கழகம்தான். 67ஆம் ஆண்டு முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியிலே ஒருவர்கூட இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே அமர்ந்திருக்கின்ற பெரியகுளம் மேத்தா, நெல்லை கதிரவன், சாதிக்பாட்சா ஆகிய மூவர் முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆனார்கள். அதே நேரத்தில் கழக ஆதரவோடு முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த ரவணசமுத்திரம் பீர் முகமது, சென்னை டாக்டர்பேக், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அப்துல் கபூர் ஆகிய மூவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆனார்கள்.

1970இல் மாநிலங்களவை உறுப்பினராக அருமை நண்பர் அப்துல் சமது, காஜா மொய்தீன் இருவரையும் திராவிட முன்னேற்றக் கழகம் அனுப்பி வைத்தது. திருச்சி ஜானிபாய் அவர்களை மீண்டும் ஒரு முறை தமிழக மேலவை உறுப்பினராகக் கழகம் ஆக்கியது. 1971ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு நடைபெற்ற தேர்தல் என்று உங்களுக்குத் தெரியும். பெருந்தலைவர் காமராஜரும், மூதறிஞர் இராஜாஜியும் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்த அந்த காலகட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் 184 இடங்களில் வெற்றி பெற்ற அதே நேரத்தில் சாதிக்பாட்சா, கதிரவன் ஆகியோர் கழகத்தின் சார்பிலும் அப்துல் ஜப்பார், அப்துல் லத்தீப், அபுசாலி, திருப்பூர் மொய்தீன், காதர் மொய்தீன், அப்துல் வகாப் ஆகியோர் முஸ்லீம் லீக் சார்பிலும் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆனார்கள்.

பெரியகுளம் பாராளுமன்ற உறுப்பினராக ஷெரீப் என்ற நண்பர் கழக ஆதரவோடு முஸ்லீம் லீக் உறுப்பினராக வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றார். சென்னை எம்.எஸ். அப்துல் காதர், திண்டுக்கல் காதர்ஷா ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக அன்றைக்கு நியமிக்கப்பட்டார்கள். இசை முரசு நாகூர் அனீபா தமிழக மேலவை உறுப்பினராக அப்பொழுது நியமிக்கப்பட்டார்.

1989இல் நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்களாக சாதிக்பாட்சா, இரகுமான்கான், எஸ்.என்.உபயதுல்லா, நெல்லை கதிரவன் ஆகியோர் கழகத்தின் சார்பிலும் - அப்துல் லத்தீப், வாணியம்பாடி அப்துல் சமத், கடலாடி அமீது இப்ராகிம், பூம்புகார் முகமது சித்திக் ஆகிய நால்வரும் முஸ்லீம் லீக் சார்பில் கழக ஆதரவோடும் வெற்றி பெற்றார்கள். கழகத்தைச் சேர்ந்த வேலூர் முகமது சகி மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கழகத்தின்

சார்பில் வெற்றி பெற்ற முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் இரகுமான்கன், உபயதுல்லா, ஊட்டி முபாரக், கடையநல்லூர் நயினாமுகமது கழக ஆதரவோடு வெற்றி பெற்ற இந்திய தேசிய லீக் சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் லத்தீப், நிஜாமுதீன், இஸ்மாயில், காதர்மைதீன், நாசர் ஆகியோராகும். இந்த ஐந்து பேரில் இப்போது இரண்டு பேர் நாசரும், இஸ்மாயிலும் தமிழ் மாநில தேசீய லீக்கில் இருக்கிறார்கள் என்பதும் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். இராமநாதபுரம் எம்.ஏ. காதர் மாநிலங்களவை உறுப்பினராக கழகத்தின் சார்பில் அனுப்பப்பட்டுள்ளார் என்பதும் நம்முடைய இசைமுரசு நாகூர் அனீபா தற்போது வக்பு வாரியத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம் பதவிப் பொறுப்புக்களில், நியமனங்களில் தொடர்ந்து பல ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தாலும், எதிர்க்கட்சியிலே இருந்தாலும் தன்னுடைய பங்கை இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செலுத்த தவறியதில்லை என்பதற்காகத்தான் இதையெல்லாம் எடுத்துக் காட்டினேன்.

## இஸ்லாமியரும் இடஒதுக்கீடும்

இவ்வளவிற்கும் பிறகு நபிகள் நாயகத்தின் விழாவிற்கு முதன்முதலாக இந்தியாவிலேயே முதன்முதலாக சம்பளத்தோடு கூடிய விடுமுறை அளித்த ஒரேயொரு மாநிலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற இந்த தமிழ் மாநிலம்தான் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். காயிதே மில்லத அவர்களுடைய சிலை ஒன்றை வைக்க வேண்டுமென்று உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது எண்ணினோம். அந்த எண்ணம் தவறானது என்பதை உணர்ந்தோம். ஏனென்றால் சிலை வணக்கம் இஸ்லாமிய பெருமக்களுக்குக் கூடாத ஒன்று. அவர்கள் ஏற்காத ஒன்று என்ற காரணத்தால்

காயிதே மில்லத் அவர்களின் பெயர் விளங்க வேறென்ன செய்யலாம் என்று யோசித்தோம். யோசித்துக் கொண்டே இருந்தோம். அண்ணா மறைந்து விட்டார். அந்த நேரத்தில் சென்னை அண்ணா சாலையிலே இருக்கின்ற ஒரு கல்லூரிக்குக் காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி என்று பெயரிட்டோம், கடற்கரையோரத்திற்குப் பக்கத்திலேயே காயிதே மில்லத் கல்லூரி முன்னேற்றக் கழக ஆட்சியின் பங்குதான்.


இன்றைய தினம் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய அடக்க இடத்திற்கு யார்யாரோ வருகிறார்கள். வரவேண்டும். வருகிறவர்களையெல்லாம் நன்றியோடு வரவேற்கிறேன். முன்பு வராவிட்டாலும் இப்போது வந்தீர்களே என்று அவர்களையெல்லாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏன் வந்தாய் என்று கேட்க விருந்தோம்பல் பண்பு தெரியாதவனல்லன் நான். விருந்தோம்பலுக்குத் தனியாக ஒரு அதிகாரமே படைத்த திருக்குறளைப் படித்தவன் நான். எனவே ஏன் வந்தாய் என்று கேட்க மாட்டோம், எப்போது வந்தாய் என்று கேட்போம். வருக, வருக என்றழைப்போம். அழைத்துக் கொண்டேயிருக்கிறோம். இப்படி அன்று முதல் இன்று வரை சிறுபான்மை சமுதாயத்தோடு அது கிறிஸ்தவ சமுதாயமாக இருந்தாலும், இஸ்லாமிய சமுதாயமாக இருந்தாலும் அவர்களோடு உடன்பிறவா முன்னேற்றக் கழகத்தார் இட ஒதுக்கீட்டிலே அவர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் இந்த ஆட்சியின் சார்பில் என்ற கேள்விக் குறியோடு உங்களை இங்கிருந்த அனுப்புகின்ற ஒரு காரியத்தை நம்முடைய டாக்டர் அவர்கள் இங்கே செய்திருக்கின்றார்கள்.

டாக்டர் நோய்க்கு மருந்து கொடுக்க வேண்டும். இப்போது ஒரு நோயையே உருவாக்கி விட்டாரோ என்கின்ற அச்சம் எனக்கேற்பட்டிருக்கின்றது. ஆனால் நோயாக நான் கருதவில்லை. இடஒதுக்கீடு உங்களுக்கு இல்லாதது ஒரு நோய். அந்த நோயை நிச்சயமாக - அந்த டாக்டர் இங்கே சொன்னாரே. அதைத் தொடர்ந்து நானும்

ஏற்கனவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டம் பெற்றிருக்கின்றேன். அந்த டாக்டர் என்ற முறையிலே அந்த நோயை தீர்ப்பேன் (கைதட்டல்). நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் - அந்தந்த மாநில அரசுகள் இட ஒதுக்கீட்டிலே யார் யாருக்கும் எவ்வளவு இடம் ஒதுக்குவது என்பதற்கான முடிவை மேற்கொள்ளலம் என்பதற்கான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வாருங்கள் என்று பல ஆண்டுக் காலமாகத் திராவிட முன்னேற்றக் கழகமும், இன்றைக்குத் தோழமைக் கட்சியாக இருக்கின்ற பா.ம.க. ராஜீவ் காங்கிரஸ், ம.தி.மு.க. ஆகிய கட்சிகள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

அது வரும் - அது வருகிற நேரத்தில் வரட்டும் - இருந்தாலும் அதுவருகின்ற வரையிலே காத்திராமல் வெகு விரைவிலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இஸ்லாமியர்களுக்காக இடஒதுக்கீடு தரப்படும் (பலத்த கைதட்டல்) என்ற உறுதியை ஏற்கனவே நடைபெற்ற - மறைந்த நண்பர் அப்துல் சமத் முன்னின்று கடற்கரையில் நடத்திய மாநாட்டில் இதுபற்றிப் பரிசீலிப்போம் என்று சொன்னேன். - இப்போது சொல்கிறேன். விரைவில் கொண்டு வருவோம், குறிப்பிட்ட அளவு முன்னோடித் திட்டமாகக் கொண்டு வருவோம் (கைத்தட்டல்) என்பதை அறிவித்து அதுதான் இன்றைய இப்தார் நிகழ்ச்சியிலே என்னுடைய செய்தி என்று கூறி விடைபெறுகிறேன்.

* * * * * * * *



கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்களுடன் தலைவர் கலைஞர்.